


**20 . 09. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. **இந்தியா தற்சார்புடன் உலக நாடுகளிடையே** வலிமையாக நிற்பதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

2. **தமிழகத்தின் தென்மாவட்டங்களின்** தொழில்வளர்ச்சியை விரைவுபடுத்த வேண்டுமென்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அறிவுறுத்தியுள்ளார்.

3. **செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து** சென்னை மாநகருக்கு கூடுதல் குடிநீர் வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

4. **தூத்துக்குடியில் 30 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில்** இரண்டு கப்பல் கட்டும் தளத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானதாக மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா கூறியுள்ளார்.

5. **சீன மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர்** அரையிறுதி ஆட்டத்தில் இன்று இந்தியாவின் ரான்கிரெட்டி, சிராக்ஷெட்டி இணை இன்று களமிறங்குிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖

**பிரதமர்**

**இந்தியா தற்சார்புடன் உலக நாடுகளிடையே** வலிமையாக நிற்பதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

குஜராத் மாநிலம் **பாவ்** நகரில் 34 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான பெருங்கடல் வளர்ச்சி திட்டத்திற்கு இன்று அடிக்கல் நாட்டி பேசியஅவர், உலகளாவிய கடல்சார் சக்தியின் முதுகெலும்பாக நம்தேசத்தின் துறைமுகங்கள் வளர்ந்து வருவதாக குறிப்பிட்டார்.

2047-ம் ஆண்டிற்குள் நமது கடல்சார் வர்த்தகம் மும்மடங்காக அதிகரிக்கும் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அடுத்த தலைமுறை சீர்த்திருத்தங்களால் கடல்சார் பிரிவுகள் வளர்ச்சிபெற்று, கடல்வளம் பெருமளவு பெருகும் என்றார்.

நம்நாட்டின் கடலோர பகுதிகள் எதிர்கால தேச வளர்ச்சியின் திறவுகோலாக இருக்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு.சர்பானந்த சோனோவால் கடந்த 11 ஆண்டுகளில் துறைமுகம் சார்ந்த பிரம்மாண்ட வளர்ச்சி இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

## நிர்மலா சீதாராமன்

**சரக்கு சேவைவரி குறைப்பு நன்மைகள்** பொதுமக்களுக்கு முழுமையாக கிடைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன்

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் தீப்பெட்டி தொழில் நூற்றாண்டு விழாவில் இன்று உரையாற்றிய அவர் தென்மாவட்டங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தொழில்வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை விரைவு படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பல்வேறு பொருட்களுக்கு 10 சதவிகிதம் அளவிற்கு வரி குறைப்பு செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியஅவர், 2047-ல் வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான தொலைநோக்கு திட்டங்களை பிரதமர் திரு. நரேந்திரமோடி வகுத்து வருவதாக கூறினார்.

நாட்டின் தொழில் வர்த்தகத்தில் பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலின் பங்களிப்பிற்கான திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்த வேண்டுமென சுட்டிக்காட்டினார்.

பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

சாத்தூர், குடியாத்தம், தென்காசி, தர்மபுரி, பொள்ளாச்சி, காவேரி பட்டினம் பகுதிகளை சேர்ந்தா தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் தொழிலாளர்கள் இதில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖

**அஷ்விணி வைஷ்ணவ்**

**நாட்டின் முதலாவது புல்லட் ரயில் அஹமதாபாத்** மும்பை இடையே இன்னும் 2 ஆண்டுகளில் இயக்கப்படும் என்று மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

நவி மும்பையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், புல்லட் ரயில் செயல்பாட்டிற்கு வரும்பொழுது பயண நேரம் வெகுவாக குறைவதோடு, நாட்டின் வர்த்தக பொருளாதார மையங்கள் இணைக்கப்பட்டு அனைவருக்கும் பெரிய அளவில் பயனளிக்கும் என்றார்.

புல்லட் ரயில் கட்டமைப்பில் உள்நாட்டு தொழில்நுட்பங்களும், உற்பத்தி பொருட்களும் பெருமளவு பயன்படுத்தப்படுவதாக கூறியஅவர், இதில் சில பொருட்களை நாம் ஏற்றுமதி செய்துள்ளோம் என்று பெருமிதம் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

**ராஜ்நாத் சிங்**

**மத்திய பாதுகாப்பு திரு. ராஜ்நாத் சிங் 2 நாள்** அரசுமுறை பயணமாக இன்று மொராக்கோ செல்கிறார்.

சுயசார்பு இந்தியா இயக்கத்தின் கீழ் பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சருடன் விரிவான ஆலோசனைகளை மேற்கொள்கிறார்.

தொடர்ந்து ரபத்தில் ஆப்ரிக்கவாழ் இந்தியர்களையும் அமைச்சர் சந்திக்கிறார்.

❖❖❖❖❖❖❖

**சரக்கு சேவை வரி**

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் அறிவிப்பிற்கு ஏற்ப சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள் நாளைமறுநாள் முதல் நடைமுறைக்கு வரும் நிலையில், மக்களின் சுமையை குறைக்கும் வகையில், மின்னனு சாதனங்கள் பிரிவில் பல்வேறு பொருட்களுக்கான வரி குறைக்கப்படுகிறது.

ஏ.சி., பாத்திரம் துலக்கும் இயந்திரங்கள், தொலைக்காட்சி பெட்டி உள்ளிட்ட பல மின்னணு சாதனங்களின் வரி 28 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

இதனால் நுகர்வோரின் வாங்கும் திறன் அதிகரிப்பதோடு, உள்நாட்டு உற்பத்தியாளர்களும் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பல்வேறு தரப்பினர் இந்த வரி குறைப்பை வரவேற்றுள்ள நிலையில், கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் இதுகுறித்து எமது செய்திபிரிவிடம் பேசுகையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

மாணாக்கருக்கு கல்வியுடன் நல்லொழுக்கத்தை பயிற்றுவிப்பதன் அவசியத்தை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் பள்ளிக்கல்வித் துறையின் முப்பெரும் விழாவில் இன்று உரையாற்றிய அவர், மாணாக்கரிடையே வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்க வேண்டும் என்று கூறினார்.

இலக்கியம், பொதுஅறிவு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்த கலந்துரையாடல்களை அதிகரிக்குமாறும் முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் 277 கோடி ரூபாய் மதிப்பிலான பள்ளி கல்வித்துறை மேம்பாட்டு திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சென்னை மாநகருக்கு கூடுதல் குடிநீர் வழங்கும் திட்டத்தையும் முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖

**டி.ஆர்.பி.ராஜா**

**தூத்துக்குடியில்** 30 **ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில்** 2 கப்பல் கட்டும் தளத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானதாக மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா இன்று தெரிவித்துள்ளார்.

புதிதாக தொடங்கப்படும் இந்த 2 திட்டங்களால் கப்பல் கட்டும் தொழிலில் சர்வதேச மையமாக தமிழ்நாடு மேம்படும் என்றார்.

உலகத்தரம் வாய்ந்த இந்த 2 கப்பல் கட்டும் தளங்கள் தூத்துக்குடியில் அமைக்கப்படுவதன் மூலம், 55 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என கூறிய அவர், மாநில தொழில்துறை வரலாற்றில் இது ஒருபுதிய சகாப்தமாக திகழும் என எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

**கடற்கரை தூய்மை தினம்**

**சர்வதேச கடற்கரை தூய்மை தினம் இன்று** கடைபிடிக்கப் படுகிறது.

கடல் மற்றும் கடல்வாழ் உயிரிழனங்களின் பாதுகாப்பிற்கு தூய்மையின் அவசியத்தை வலியுறுத்தும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாடுமுழுவதும் நடைபெறுகின்றன.

இந்நாளையொட்டி நாகை கடற்கரையில் பாரதிதாசன் பல்கலைக்கழக மாணாக்கர் தூய்மைப்பணிகளில் ஈடுபட்டனர்.

மாசில்லா கடற்கரையை உருவாக்கி தூய்மை இந்தியா இயக்கத்திற்கு வலு சேர்ப்பதன் அவசியம் குறித்து இதில் எடுத்துரைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖

**தண்ணீர் திறப்பு**

கிருஷ்ணகிரி மாவட்டம் கெலவரபள்ளி அணை நிரம்பும் தருவாயில் உள்ளதால் அணையின் பாதுகாப்பு கருதி ஆயிரத்து 290 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

இதையடுத்து தென்பெண்ணை ஆற்றங்கரையோர கிராமங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கர்நாடக மாநில நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை காரணமாக கெலவரப்பள்ளி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

**வானிலை**

**தென்மேற்கு பருவமழை வட தமிழகத்தில்** தீவிரமடைந்துள்ளது.

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஈரோடு, நீலகிரி, தேனி, விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

தென்தமிழக கடலோரம், மன்னார்வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு அடுத்த 5 நாட்களுக்கு செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**சீன மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர்** அரையிறுதி ஆட்டத்தில் இன்று இந்தியாவின் ரான்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணை - மலேஷியாவின் ஆரோன்சியா, ஷோஉய் இணையை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

**மகளிர் கிரிக்கெட்**

**டெல்லியில் இந்தியாவிற்கு எதிரான** 3-வது இறுதி ஒருநாள் சர்வதேச மகளிர் கிரிக்கெட் போட்டியில் டாஸ்வென்று முதலில் பேட் செய்யும் ஆஸ்திரேலியா சற்றுமுன் 5 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 43 ரன் எடுத்திருந்தது.

❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**ஆசிய கோப்பை 20-20** கிரிக்கெட் சூப்பர் 4 சுற்றுகள் இன்று தொடங்குகின்றன.

துபாயில் நடைபெறும் முதல் போட்டியில் இன்றிரவு பங்களாதேஷ் இலங்கையை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖